




முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை திரு. தென்காசி சு. ஜவஹர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டு திட்ட விளக்கம் மற்றும் கலந்துரையாடல் கூட்டம் நாகர்கோவில் மகளிர் கிருஸ்துவ கல்லூரி, மாடரேட்டர் ஞானதாசன் நினைவு கூட்டரங்கில் இன்று (08.11.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 781/2016 நாள்: 08.11.2016

**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை திரு. தென்காசி சு. ஜவஹர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டு திட்ட விளக்கம் மற்றும் கலந்துரையாடல் கூட்டம் இன்று (08.11.2016) நடைபெற்றது.**

முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை திரு. தென்காசி சு. ஜவஹர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டு திட்ட விளக்கம் மற்றும் கலந்துரையாடல் கூட்டம் நாகர்கோவில் மகளிர் கிருஸ்துவ கல்லூரி, மாடரேட்டர் ஞானதாசன் நினைவு கூட்டரங்கில் இன்று (08.11.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை, திரு. தென்காசி. சு.ஜவஹர். இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகள், மாநில அரசின் நிறுவனங்கள், அரசு பல்கலை கழகங்கள், அரசுசார் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் 2012- ஜூலை-2012 முதல் ஜுன்-2016 வரை தமிழ்நாடு அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பணியாளர்களுக்கான மேம்படுத்தப்பட்ட புதிய மருத்துவ காப்பீட்டுதிட்டம் -2016 திட்டம் ஜூலை-2016 முதல் ஜுன் 2020 வரை நான்கு வருடங்களுக்கு தமிழ்நாடு அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை யுனைட்டெட் இந்தியா காப்பீடு கம்பெனி மூலம் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது. வருட சந்தாவாகரூ.2100/-ம் இதன் மீதான சேவை வரியும் சேர்த்து ரூ.2415/-ஐ காப்பீட்டு கம்பெனிக்கு தமிழ்நாடு அரசு காப்பீட்டுச்சந்தாவை முதலில் செலுத்தி விடுகிறது. பின்னர் அரசு ஊழியர்களின் சந்தாவாக மாதம் ரூ.180 வீதம் அவர்களது மாத சம்பளத்திலிருந்து ஜூலை-2016 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது. பணியாளர்களது சந்தா தொகையினைவிட கூடுதலாக ஏற்படும் சந்தா செலவினத்தை (ரூ.255/-) தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்கிறது.

இத்திட்டத்தின் கீழ் மருத்துவ சிகிச்சைக்காக தொகை எதுவும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு செலுத்த வேண்டியதில்லை. இது ஒரு பணமில்லா மருத்துவ சிகிச்சைதிட்டம் (Cashless Scheme) ஆகும். மருத்துவசிகிச்சைக்கான செலவீனத்தொகையினை காப்பீடு கம்பெனி மருத்துவமனைகளுக்கு செலுத்திவிடும். சந்தா செலுத்தும் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் நான்கு வருடகாலத்தில் மருத்துவ செலவுக்காக அதிகபட்சம் ரூ.4 இலட்சம் வரை சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். சில குறிப்பிட்ட மருத்துவசிகிச்சைகளுக்கு அதிகபட்ச பயனாக ரூ.7.5 இலட்சம் வரை பயன்பெறலாம்.

மேலும் சிறப்பு இனமாக கண்புரை நீக்குதல் சிகிச்சைக்காக அதிகபட்ச தொகை ரூ.25,000/-மும் மற்றும் கர்ப்பப்பை அகற்றும் அறுவை சிகிச்சைக்காக அதிகபட்சமாக ரூ.45,000/- எனவும் பயன்பாட்டு தொகை அதிகப் படுத்தப்பட்டுள்ளது. விபத்துகளால் ஏற்படும் அவசர சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை பட்டியலிடப்படாத மருத்துவமனைகளில் மேற்கொண்டாலும் அதற்கான தொகையினை திரும்ப பெறுவதற்கு தற்போதைய திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் அரசு பணியாளர்கள், அவர்களது சட்டப் பூர்வமான வாழ்க்கைத்துணை, மற்றும் திருமணமாகாத வேலையில் இல்லாத 25 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயன் பெறுவர். திருமணம் ஆகாத அரசு பணியாளர்களுக்கு அவருக்கு திருமணம் ஆகும் வரை அவரது பெற்றோர் பயன் பெறுவர். மாற்றுத்திறனாளிகள் அல்லது மனவளர்ச்சிக் குன்றியகுழந்தைகள் 40 சதவீதத்திற்கு குறையாத உடல் ஊனமுற்றவராயிருப்பின், வயது உச்சவரம்பின்றி இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 10,22,843 பயனாளிகள் பயன் பெறுவது மட்டுமல்லாமல், இவர்களை சார்ந்த 40 முதல் 50 இலட்சம் நபர்கள் வரை பயனடைவார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 24,722 அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் பயனடைவார்கள் எனவும், 01.07.2012 முதல் 30.6.2016 வரை இம்மாவட்டத்தில் 4,732 பயனாளிகள் ரூ.16.01 கோடி அளவிற்கு பணமில்லா சிகிச்சை பெற்றுள்ளார்கள் என தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலம் கருத்தில் கொண்டு, புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் அறிவித்து, அதன் மூலம் முழுமையாக பயனடையும்வகையில், சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். இதன் மூலம் அரசு ஊழியர்கள் மட்டுமல்லாமல், அவர்களின் குடும்பத்தினர் மிகவும் பயனடைவார்கள். ஏனென்றால் பணம் இல்லா மருத்துவ சிகிச்சை திட்டம் என்பது முற்றிலுமாக அவர்கள் மேற்கொள்ளும் சிகிச்சைக்கு யுனைட்டெட் இந்தியா காப்பீடு நிறுவனத்தின் மூலம் காப்பீடுத்தொகை வழங்கப்படுகிறது.

எனவே அரசு ஊழியர்கள் அனைவரும் இத்திட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் எனவும், தற்போது நடைபெறும் புதிய மருத்துவ காப்பீடு திட்டத்தில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், அதனை தெளிவு படுத்தி கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், இணை இயக்குநர் (புதியகாப்பீட்டுத்திட்டம்) திரு. ஏ.பி.மகாபாரதி, மண்டல இணை இயக்குநர் முனைவர். கே.எஸ்.முத்துப்பாண்டியன், மாவட்டக் கருவூல அலுவலர் திரு.கா.பாலகிருஷ்ணன், யுனைடெட் இந்தியா இன்சுரன்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் திரு.வி.இரகுநாதன், மண்டல மேலாளர் திரு.கே. இராமகிருஷ்ணன், கூடுதல் கருவூல அலுவலர் திரு. ரவிசந்திரன், துணை கருவூல அலுவலர் திரு. ஜார்ஜ், பெண்கள் கிறிஸ்துவ கல்லூரி முதல்வர் முனைவர் நிர்மலா நல்லதம்பி மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகர்கோவில்.